# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **27/ந/2018**

ஆணை எண். **32/2018**

நாள் : **20/02/2018**

திரு ஒ. இப்ஜஅர் ரஹ்மான்,
பேர்ணாம்பட்டு – 635 810.

– முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி,
பேர்ணாம்பட்டு.

– எதிர் மனுதாரர்

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு நகராட்சி, எண்.5/6, ஆமீனா வீதி சந்து முகவரியில் வசிக்கும் திரு ஒ.இப்ஜஅர் ரஹ்மான் அவர்களின் 14.02.2018 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 15.02.2018 அன்று பெறப்பட்டு, 27/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு, கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு நகராட்சி, எண்.5/6, ஆமீனா வீதி சந்து முகவரியில் வசிக்கும் திரு ஒ.இப்ஜஅர் ரஹ்மான் என்பவர், தனது 07.08.2017 நாளிட்ட கடிதத்தில் அவரது வீட்டிற்கான சொத்துவரி விதிப்பு எண் மாற்றம் செய்யப்பட்டு புதிய சொத்துவரி விதிப்பு எண் வழங்கப்பட்டதற்கான காரணங்களைக் கோரி தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் விவரங்கள் கோரப்பட்டதாகவும், 9 மாதங்கள் கடந்த நிலையிலும் அவ்விவரங்கள் வழங்கப்படவில்லை எனத் தெரிவித்து இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்பட்ட விவரங்கள் வழங்கப்படவில்லையெனில், சம்பந்தப்பட்ட தகவல் அறியும் உரிமை சட்ட ஆணையத்திற்கு மேல்முறையீடு செய்வதே முறையாகும். எனவே, அவ்வாணையத்திடம் மேல்முறையீடு செய்துகொள்ளுமாறு முறையீட்டு மனுதாரரை அறிவுறுத்தி அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2018– ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 20–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

1. திரு ஓ. இப்ஜுஅர் ரஹ்மான்,
எண்.5/6, ஆமீனா வீதி சந்து,
பேர்ணாம்பட்டு – 635 810.

2. நகராட்சி ஆணையர்,
பேர்ணாம்பட்டு நகராட்சி.
பேர்ணாம்பட்டு, வேலூர் மாவட்டம்,
வேலூர் – 635 810.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி